பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

19 07 2025 **SATURDAY** 7 15 **AM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நீதித்துறையில் முறைகேடு மற்றும் ஊழலை அரசு ஒரு போதும் பொறுத்துக் கொள்ளாது என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

2. பீகாரில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு சரிபார்க்கும் பணியில் இதுவரை, 94 புள்ளி ஆறு எட்டு சதவீத வாக்காளர்கள் விண்ணப்பங்களை வழங்கியுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

3. சத்திஷ்கரில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது, 6 நக்ஸலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டன.

4. பங்களாதேஷில் கைது செய்யப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் 34 பேரை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

5. ஹங்கேரியில் நடைபெற்று வரும் சர்வதேச மல்யுத்த போட்டியில், இந்தியா நேற்று இரண்டு தங்கப்பதக்கம் உட்பட நான்கு பதக்கங்களை வென்றது.

>>>>><<<<<

நீதித்துறையில் முறைகேடு மற்றும் ஊழலை அரசு ஒரு போதும் பொறுத்துக் கொள்ளாது என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அவர் அளித்துள்ள பேட்டியில், அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி யஸ்வந்த் வர்மாவை பதவிநீக்கம் செய்வதில் அனைத்து அரசியல் கட்சிகளும், ஒருமித்த கருத்தை கொண்டிருப்பதாக கூறினார்.

இதுதொடர்பாக தாம் பல்வேறு அரசியல் கட்சிகளின் மூத்த தலைவர்களுடன் ஆலோசித்துள்ளதாக தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் ஒற்றை இலக்க உறுப்பினர்களை கொண்ட அரசியல் கட்சிகளின் தலைவர்களுடனும் தாம் பேசியதாகவும், பதவி நீக்க தீர்மானம் நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு வரும் போது அனைவரும் அவையில் கட்டாயம் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

>>>>><<<<<

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் வரும் திங்கட்கிழமை தொடங்கவுள்ளதை அடுத்து, அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

புதுதில்லியில் நாளை நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்றத்தில் இடம்பெற்றுள்ள கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் சுமுகமாக நடைபெற அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்பை அரசு கோரியுள்ளது.

வரும் திங்கட்கிழமை தொடங்கவுள்ள மழைக்கால கூட்டத் தொடர் அடுத்த மாதம் 21ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.

இந்த கூட்டத் தொடரில் பல முக்கியமான மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டு, நிறைவேற்றப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

பீகாரில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு சரிபார்க்கும் பணியில் இதுவரை, 94 புள்ளி ஆறு எட்டு சதவீத வாக்காளர்கள் விண்ணப்பங்களை வழங்கியுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இன்னும் 5 புள்ளி இரண்டு சதவீத வாக்காளர்கள் மட்டுமே விண்ணப்பங்களை சமர்ப்பிக்காமல் உள்ளனர் என்றும், சிலர் காலஅவகாசம் கேட்டுள்ளதாகவும் அந்த ஆணையம் கூறியுள்ளது.

>>>>><<<<<

சத்திஷ்கரில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது, 6 நக்ஸலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நாராயன்பூர் மாவட்டத்தில் மத்திய - மாநில பாதுகாப்புப் படையினர் ஒருங்கிணைந்து மேற்கொண்ட தேடுதல் வேட்டையின் போது, மறைந்திருந்த நக்ஸலைட்டுகள் துப்பாக்கியால் சுட்டதாகவும், பாதுகாப்புப் படையினரின் பதில் தாக்குதலில் 6 நக்ஸலைட்டுகள் உயிரிழந்ததாகவும் காவல்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உயிரிழந்த 6 பேரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும், அங்கிருந்து ஏகே.47 ரக துப்பாக்கி உட்பட ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இந்த மோதல் நடைபெற்ற பகுதியில் பாதுகாப்புப் படையினர் தொடர்ந்து தேடுதல் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

>>>>><<<<<

தமிழகத்தில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தலுக்குப் பின்னர், கூட்டணி ஆட்சியில் காங்கிரஸ் இடம்பெறுவது குறித்து கட்சியின் தலைமை தான் முடிவெடுக்கும் என்று அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. கே.வி. தங்கபாலு கூறியுள்ளார்.

சேலத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் கூட்டணி ஆட்சி என்பத தற்போது பேசுபொருளாக மாறியுள்ளது என்று தெரிவித்தார்.

தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும், கல்வி மேம்பாட்டிற்கும் பாடுபட்ட மறைந்த முதலமைச்சர் காமராஜர் குறித்து சர்ச்சைக்குரிய கருத்துக்களை தெரிவிப்பதை அரசியல் தலைவர்கள் தவிர்க்க வேண்டும் என்றும் திரு. தங்கபாலு கூறினார்.

>>>>><<<<<

பொருளாதார விவகாரங்களில் ஜி.20 நாடுகளிடையே ஒத்துழைப்பை மேம்படுத்துவது அவசியம் என்று தென்னாப்பிரிக்காவின் டர்பன் நகரில் நடைபெற்ற இந்நாடுகளின் நிதியமைச்சர்கள் கூட்டம் வலியுறுத்தியுள்ளது.

மத்திய வங்கி அதிகாரிகளும் கலந்து கொண்ட இந்த கூட்டத்தில், சர்வதேச அளவில் நடைபெற்று வரும் மோதல்களால் ஏற்பட்டுள்ள பதற்றங்கள், விநியோக சங்கிலியில் ஏற்பட்டுள்ள சீர்குலைவு, கடன் மற்றும் பருவநிலை மாற்றம் தொடர்பான பேரழிவுகள் உள்ளிட்ட முக்கியமான விஷயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன.

பொருளாதார விவகாரங்களில் எழுந்துள்ள புதிய சவால்களை எதிர்கொள்ள ஜி.20 நாடுகள் ஒன்றிணைந்து செயல்பட இந்தக் கூட்டத்தில் உறுதியளிக்கப்பட்டது.

வளர்ச்சியை மையமாக கொண்ட பொருளாதார கொள்கைகளை தொடர, இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற நிதியமைச்சர்கள் ஒப்புக் கொண்டனர்.

முதலீட்டை ஊக்குவித்தல், ஒவ்வொரு நாடுகளிலும் உள்ள மத்திய வங்கிகளின் சுதந்திரமான செயல்பாட்டை அங்கீகரித்தல் ஆகியவற்றிலும் இந்நாடுகளிடையே கருத்தொற்றுமை ஏற்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

>>>>><<<<<

பங்களாதேஷில் கைது செய்யப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் 34 பேரை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

இந்தியா – பங்களாதேஷ் எல்லையில் **Mongla** என்ற சர்வதேச எல்லைப்பகுதியில் இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, பங்களாதேஷ் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இந்த தகவல் அறிந்தவுடன் வெளியுறவுத்துறை அமைச்சகம், பங்களாதேஷில் உள்ள இந்திய தூதரகத்துடன் தொடர்பு கொண்டு, மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுத்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மீனவர்கள் மற்றும் அவர்களது படகுகளை பாதுகாப்பாக மீட்க, தூதரக அளவில் தொடர்ந்து முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும் வெளியுறவுத்துறை கூறியுள்ளது.

>>>>><<<<<

நாமக்கல் மாநகராட்சி தூய்மையை சிறப்பாக பராமரித்ததற்காக மத்திய அரசின் விருதை அண்மையில் பெற்றது.

இந்த விருது கிடைத்தது குறித்து பொதுமக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

(சவுண்ட் பைட் - பொதுமக்கள் 35 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

அமெரிக்காவின் லாஸ்ஏஞ்சல்ஸ் நகரில் ஏற்பட்ட வெடிவிபத்தில் அரசு உயரதிகாரி ஒருவர் உயிரிழந்தார்.

வெடிகுண்டு செயலிழப்பு அலுவலகம் அமைந்துள்ள பகுதியில் இந்த சம்பவம் நடைபெற்றுள்ளது.

வெடிவிபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாகவும், வாகனங்கள் நிறுத்துமிடத்தில் இந்த சம்பவம் நடைபெற்றுள்ளதாகவும் காவல்துறையினர் தெரிவித்தனர்.

>>>>><<<<<

அஸ்ஸாம், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் மற்றும் கர்நாடகாவின் சில இடங்களில் இன்று கன முதல் அதி கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கேரளாவின் பல்வேறு பகுதிகளில் நாளை பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் ஹிமாச்சலப்பிரதேசம், உத்ராகண்ட், உத்தரப்பிரதேசம், பஞ்சாப், ஹரியானா ஆகிய மாநிலங்களிலும், ஜம்மு காஷ்மீரிலும் இம்மாதம் 24ஆம் தேதிவரை கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

வடகிழக்கு மாநிலங்களில் அடுத்த 7 நாட்களுக்கு பல்வேறு பகுதிகளில் இடிமின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்னிந்திய பகுதிகளின் மேல், வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுவதாலும், மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாகவும் தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி மற்றும் கோவை மாவட்ட மலைப்பகுதிகளின் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், தேனி, தென்காசி, கன்னியாகுமரி, திருவள்ளூர், ராணிப்பேட்டை, வேலூர், திருவண்ணாமலை, திருநெல்வேலி மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

**>>>>><<<<<**

ஹங்கேரியில் நடைபெற்று வரும் சர்வதேச மல்யுத்த போட்டியில், இந்தியா நேற்று இரண்டு தங்கப்பதக்கம் உட்பட நான்கு பதக்கங்களை வென்றது.

புடாபெஸ்டில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதிச்சுற்றில் மகளிர் 53 கிலோ எடைப்பிரிவில் **Antim Panghal, 7-4** என்ற புள்ளிக்கணக்கில் ரஷ்யாவின் **Natalia-**வை வென்றார்.

சர்வதேச போட்டியில் **Antim Panghal** இந்த ஆண்டு கைப்பற்றிய இரண்டாவது தங்கப்பதக்கம் இதுவாகும்.

72 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் **Harshita** 10-0 என்ற புள்ளிக்கணக்கில் கஜகஸ்தானின் **Zhamila Bakbergenova-**வை வென்றார்.

அதேநேரத்தில், 57 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் **Neha Sangwan** வெள்ளிப்பதக்கத்தையும், 50 கிலோ எடைப்பிரிவில் **Neelam** வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை, 3 தங்கம், 1 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

**>>>>><<<<<**

இந்தியா - இங்கிலாந்து மகளிர் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டி லண்டனில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு தொடங்குகிறது.

மூன்று ஆட்டங்களை கொண்ட இப்போட்டியின் முதலாவது ஆட்டத்தில், இந்தியா வெற்றிபெற்று 1-0 என்ற ஆட்டக்கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

**>>>>><<<<<**

ஜார்ஜியாவில் நடைபெற்று வரும் மகளிர் உலக கோப்பை செஸ் போட்டியில் இந்தியாவின் **Koneru Humpy, Harika, Vaishali, Divya** ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

இப்போட்டியில் ஒரே நேரத்தில் இந்திய வீராங்கனைகள் நான்கு பேர், காலிறுதிக்கு முன்னேறியிருப்பது இதுவே முதல் முறையாகும்.

**>>>>><<<<<**

இந்திய தேசிய ரைஃபிள் சங்கத்தின் தலைவராக உள்ள திரு. **Kalikesh Narayan Singh Deo** சர்வதேச துப்பாக்கிச் சுடுதல் சம்மேளனத்தின் இடைக்கால தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்த அதிகாரப்பூர்வ கடிதம், ஜெர்மனின் முனிச் நகரில் உள்ள இந்த சம்மேளனத்தின் தலைமை அலுவலகத்திலிருந்து வரப்பெற்றுள்ளதாக இந்திய துப்பாக்கி சுடுதல் சங்கத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**>>>>><<<<<**

உலக கோப்பை மகளிர் கபடி போட்டி ஹைதராபாதில் அடுத்த மாதம் 3ஆம் தேதி முதல் 10ஆம் தேதிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>><<<<<**